# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 22 ISSUE 08 AUGUST-2022 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-



# காற்றை தமது பண்டகசாலையிலிருந்து புறப்படப் பண்ணினார்

WWW.JESUSLIVES.IN

# ஆசிரியர் உரை

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். பிரசங்கி 3:11-ல் அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார் என்ற வார்த்தையின்படி நமக்கு சகலத்தையும் நேர்த்தியாகச் செய்கிற தேவன், அவருடைய காரியங்களையும், அவருடைய கிரியைகளையும் நேர்த்தியாக செய்து கொண்டு இருக்கிறார். கடந்த நாட்களில் ஜீலை 2,3-ஆகிய தேதிகளில் திருச்சியில் நடைபெற்றப் பேரின்ப பெருவிழாவில் கர்த்தர் மகிமையாய் இறங்கி கூட்டத்தை ஆசீர்வதித்தார். அந்தப் பட்டணத்திலே கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்க தேவன் கிருபை செய்தார். அந்த கூட்டத்தை **YMCA** நிர்வாகிகள் நேர்த்தியாக ஒழுங்கு செய்திருந்தார்கள். கர்த்தர் தாமே அவர்களை ஆசீர்வதிப்பாராக. அதைப் போல இரண்டாவது சனிக்கிழமை செம்பட்டியில் நடைபெறுகிற உபவாச ஜெபத்தையும் கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதித்து நடத்தி வருகிறார். கர்த்தருடைய சித்தத்தின்படியும், அவருடைய வழிநடத்துதலின்படியும் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமை மதுரை பட்டணத்தில் உபவாச ஜெபத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்த பட்டணத்தில் கர்த்தருடைய மகிமை வெளிப்பட வேண்டும். **ஆகஸ்டு மாதம் 20-ஆம் தேதி நடைபெறும் உபவாச ஜெபத்திற்கு அண்ணன் மோகன் சி.லாசரஸ் அவர்கள் வருகிறார்கள். இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவும், மற்றவர்களுக்கும் இக்கூட்டத்தைபற்றி அறிமுகப்படுத்தி, அழைத்துவரவும் உங்களை அன்புடன் அழைக்கிறோம்.** தேவனுக்குச் சித்தமானால் இந்த மாத இதழ் அச்சகத்தில் இருக்கும் போது நம்முடைய சுவிசேஷப் பயிற்சி முகாம் நடந்து கொண்டிருக்கும். அதைப் பற்றிய விவரங்களை நாம் அடுத்த மாத இதழில் தெரியப்படுத்துவோம். தொடர்ந்து சோஸியல் மீடியா ஊழியங்களுக்காகவும், கர்த்தாவே என்னை கைதூக்கி விடும், தினமும் காலைதோறும் இயேசுவை தினம் பார்ப்போம், சனிக்கிழமை தோறும் சுவிசேஷ ஒளி நிகழ்ச்சிகளுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். எல்லாவற்றிலும் தேவகரம் எங்களை நடத்தவும், பாதுகாக்கவும், தேவபெலத்தோடு செய்யவும் எங்களுக்காக ஜெபியுங்கள். உங்கள் மேலான காணிக்கைகளை அனுப்பி இந்த ஊழியத்தை தாங்குங்கள். கர்த்தரின் நாமம் நம் மூலமாக இந்த பூமியில் மகிமையடைவதாக.



அன்புடன் உங்கள் சகோதரர்

L. Vinu...

(சகோ. L.வின்சென்ட்ராஜ்)



# காற்றை தமது பண்டகசாலையிலிருந்து புறப்படப் பண்ணினார்



சகோ. L. வின்சென்ட்ராஜ்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இன்றைக்குப் பூமியிலே வாழும் மனிதர்களில் காற்றை விரும்பாதவர்கள் யாரும் இல்லை, காற்று இல்லாமல் யாரும் வாழ முடியாது. இன்றைக்கு மனிதர்கள் ஜீவிப்பது, வாழ்வது ஆண்டவருடைய ஜீவ காற்றினால் தான். யாத் 15:8 உமது நாசியின் சுவாசத்தினால் ஜலம் குவிந்து நின்றது, வெள்ளம் குவியலாக நிமிர்ந்து நின்றது. ஆழமான ஜலம் நடுக்கடலிலே உறைந்து போயிற்று என்று சொல்லப்பட்டுள்ளது. நாசியின் சுவாசக் காற்று ஆண்டவராகிய தேவன் மனிதனை களிமண்ணினால் உண்டாக்கினார். அப்படி களிமண்ணினால் உண்டாக்கிய மனிதன் மண்ணாக கிடந்தபடியால், அவன் மேல் தன்னுடைய நாசியின் சுவாசக் காற்றை ஊதினார். அப்பொழுது மனிதன் உயிருள்ளவனாக மாறினான். இன்றைக்கு மனிதனுடைய உயிர் தேவனுடைய சுவாசக் காற்று, அதனால் தான் வேதாகமத்தில் சங் 104:4-ல் தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜீவாலைகளாகவும் செய்கிறார் என்று சொல்லப்பட்டுள்ளது. அவர் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை வைத்திருக்கிறார், சந்திரனுக்கு ஒரு உறைவிடத்தை வைத்திருக்கிறார், காற்றுக்கு ஒரு பண்டக சாலையை வைத்திருக்கிறார். அந்த பண்டக சாலையிலிருந்து அவர் காற்றைப் புறப்படப்பண்ணி, அவருடைய விருப்பங்களையும், அவர் சித்தத்தையும் செய்கிறார். பல வருடங்களுக்கு முன்பாக தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிட்ட பட்டணத்தில் விமானநிலையம் விரிவாக்கம் செய்தார்கள். அப்படி விரிவாக்கம் செய்த போது அந்த இடத்தில் மிகப்பெரிய ஆலமரம் இருந்தது. அதை அகற்றுவதற்கும், வெட்டுவதற்கும் எல்லாருக்கும் பயம், காரணம் முனி ஓடுகிறது, அந்த வழியாய் போன அநேகர் மரித்துப் போய்விட்டார்கள் என்ற பீதியைப், பயத்தை கிளப்பி விட்டார்கள். இதனால் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் பயந்து, யாரும் அதை அகற்ற முன்வரவில்லை. அப்படிப்பட்ட வேளையில் திடீரென சூறாவளிக் காற்றுடன் மழை பெய்தது. பயங்கரமான சூறாவளிக் காற்றுடன் மழை பெய்தபடியினால் அந்த மரம் வேரோடு விழுந்து விட்டது. அதன் பிறகு தைரியமாய் அந்த இடத்தை விரிவாக்கம் செய்து அரசாங்கத் திட்டங்களை நிறைவேற்றினார்கள். அவர் காற்றை தமது பண்டக சாலையிலிருந்து அனுப்புகிறார் அவர் விருப்பங்களையும், சித்தங்களையும் செய்கிறது. இயேசு சொன்னார் யோவான் 3:8-ல் காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது. ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். ஆம் ஒரு தேவபிள்ளையை, இரட்சிக்கப்பட்ட, அவரை ஏற்றுக்கொண்ட, பரிசுத்த ஆவியானவின் அபிஷேகத்தோடு ஊழியம் செய்கிற ஒவ்வொருவரையும் ஆண்டவராகிய தேவன் காற்றுகளாகவும், இரதங்களாகவும் பயன்படுத்துகிறார். அவருக்குச் சித்தமானவைகளை எல்லாம் செய்கிறார். அப் 8-ஆம் அதிகாரத்தில் எத்தியோப்பியா மந்திரியான ஒரு மனிதன் எருசலேமுக்குத் தேவனைப் பணிந்து கொள்ள வந்தான். அவன் தேவனைப் பணிந்து கொண்டு திரும்ப தன் தேசத்திற்குப் போகும் போது இரதத்தில் உட்கார்ந்து வேதாகமத்தை வாசித்தான், அவன் வாசித்த வேதபகுதி அவனுக்கு விளங்கவில்லை, அந்த நேரத்தில் ஆவியானவர் காற்றாய் பிலிப்பு என்ற சுவிசேஷகனை தூக்கிக் கொண்டு போய் அந்த இரதத்துடனே சேர்த்து, ஏசாயாவின் வேத வார்த்தைகளை விளக்கிக் காட்டி, அந்த மந்திரியை இரட்சிப்புக்குள் நடத்தினார்.

எங்கேயோ போய் கொண்டிருந்த பிலிப்புவை அந்த இரதத்துடன் சேர்ந்துகொள் என்று காற்றினால் தூக்கிக் கொண்டு போனது ஆவியானவர். அப் 8:26,39 அப்படிச் சொல்லுகிறது. ஆவியானவர் காற்றானவர். இன்றைக்கு அவர் உலக மனிதர்களுடைய ஓட்டத்தைக் காட்டிலும், உழைப்பைக் காட்டிலும், நம்முடைய உழைப்பு, கிரியைகள் பெரிதாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். மனிதர்கள் பணம் சம்பாதிக்க நாம் அந்த காற்று வீசுகிற திசையில், காற்று வீசுகிற பக்கம் சென்றால் கர்த்தர் நம்மைக் கொண்டு மகிமையான காரியங்களைச் செய்வார். அற்புதமான காரியங்களைச் செய்வார். அதற்குத் தான் அவர் காற்றைத் தமது பண்டக சாலையிலிருந்து புறப்பட பண்ணுகிறார். இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கிற என் அன்னு சகோதர, சகோதரிகளே உங்களையும் என்னையும் தேவன் காற்றாகவும், அவருடைய தூதர்களாகவும், இரதங்களாகவும் அவருடைய பண்டக சாலையில் இருக்கிறவர்களாகவும், அவர் விருப்பத்தை எல்லாம் நாம் செய்து முடிக்கிறவர்களாகவும் நம்மை மாற்றிப் பயன்படுத்துவாராக. இதற்குத்தான் அவர்களை தமது பண்டக சாலையிலிருந்து அனுப்புகிறார். போகட்டும் எப்படிப்பட்ட காற்றுகளை எல்லாம் நாம் கடக்க, சந்திக்க வேண்டியதாயிருக்கிறது?, காற்றினால் உண்டாகுகிற ஆசீர்வாதங்கள், எழுப்புதல் என்ன? அதைப்பற்றி நாம் பார்ப்போம், அந்த கற்று நம்மேல் வீசும்படி நம்மை அர்ப்பணிப்போம்.

## எதிர்காற்று பெருங்காற்று

கர்த்தர் சமுத்திரத்தின் மேல் பெரும் காற்றை வரவிட்டார். கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்கதாக பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று யோனா 1:4. கர்த்தர் யோனாவின் மேலும், அவன் பிரயாணம் பண்ணின கப்பல் மீதும், அவன் கூட போன மனிதர்கள் மேலும் பெரும் காற்றை அனுப்பினார். அதனால் அந்த கப்பல் உடையவும், அவர்கள் பிரயாணம் தடைபடவும், அவர்கள் நோக்கம் நிறைவேறாமல் போகவும், கர்த்தர் அதை அனுமதித்தார். காரணம் தேவனுக்கு விரோதமாய் ஒரு மனிதன் போகும் போது, அவருடைய சித்தத்தை நிறைவேற்றாமல் இருக்கும் போது, தேவனை அறிந்திருந்தும் அவருக்காக ஒன்றும் செய்யாமல் எனக்கென்ன என்று இருக்கும் போது, அவருக்குக் கீழ்ப்படியாமல், நம் சுய நலத்திற்காக வாழும் போது, தேவன் எப்படியோ போகட்டும் என்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருக்க மாட்டார். யோனா அதைத்தான் செய்தார். அவர் தேவ சமூகத்தை விட்டு ஓடிப்போகும் போது, கர்த்தர் அதைத் தடுத்து பெருங்காற்றை வரவிட்டார். அவரை பாடுகளுக்கு உட்படுத்தினார். சாத்தான் கோதுமையை சுளகில் புடைக்கிறது போல புடைக்க உத்தரவு, அனுமதி கொடுத்தார். அன்றே அந்தக் காற்றிலே யோனா அகப்பட்டு மாட்டிக் கொண்டு பலபாடுகளுக்கு, சித்தரவாதைகளுக்கு உள்ளானார். கடைசியாக மரண போராட்டம், பாதாளங்களுக்குச் சென்று வந்துவிட்டான்,பிழைத்து வந்தது மறுபிறவி போல் ஆகிவிட்டது. காரணம் கர்த்தருக்கு விரோதமான ஊழியம், கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றாமல், தன் சொந்த சித்தத்தை நிறைவேற்றுதல், இப்படிப்பட்ட எந்த மனுஷனானாலும், எந்த விசுவாசியானாலும், எந்த ஊழியங்கள்,ஊழியக்காரர்கள் ஆனாலும் தேவன் விடமாட்டார். கண்டும் காணாதவர் போல் இருக்க மாட்டார். அவர்களை சரிபண்ணி, தமது மந்தைக்குள் வரவும், பண்டக சாலையில் அனுப்பவும், உருவாக்கவும் செய்து விடுவார் எந்த மனிதனும் தேவனுடைய வழிக்கு விரோதமான வழியில் போய் விட முடியாது. அதற்குத்தான் தேவன் யோனாவின் மேல் பேரும்காற்றை அனுப்பினார். அதற்குத்தான் அவர் பண்டக சாலை வைத்திருக்கிறார். அழிக்கிற காற்று, உருவாக்குகிற காற்று, அற்புதம் செய்கிற காற்றை வைத்திருக்கிறார். தேவைப்படும் போது எந்தக் காற்றை யாருக்கு அனுப்ப வேண்டுமே அவற்றை அனுப்பி சரி செய்து அவருடைய பாதையில் நடத்துகிறார். இதுதான் யோனாவின் வாழக்கையில் நடந்தது. அவர் மாறும் வரை, தேவ கட்டளைக்குக் கீழ்ப்படியும் வரை, தேவ சித்தத்திற்கு தன்னை அர்ப்பணிக்கும் வரை பெரும் காற்றை தேவன் நிறுத்தவில்லை. அதன் பிறகு தான் தேவன் கொந்தளிப்பை அமர்த்தினார். நாம் அவருக்கு விரோதமாய் போகும் போது சில பாதிப்புகளை, சில பிரச்சனைகளை சந்தித்து தான் ஆக வேண்டும். இதைத்தான் நாம் வேதாகமம் முழுவதிலும் காண முடிகிறது. சீஷர்களுடைய வாழ்க்கையைப் பாருங்கள் எப்போது எல்லாம் அவர்கள் இயேசுவை விட்டு விலகினார்களோ, எப்போது எல்லாம் அவர்கள் அவரை விட்டு பின்வாங்கினார்களோ அப்பொழுது எல்லாம் அவர்களும், அவர்களுடைய படகும், மீன்பிடிக்கிற தொழிலும் அலைகழிக்கப்பட்டது. நொறுக்கப்பட்டது, மூடப்பட்டது என்று மத்தேயு 8:24, லூக்கா 8:24-லும் சொல்லுகிறது. அப்பொழுது படகு அலைகளினால் மூடப்படத்தக்கதாய் கடலிலே பெரும்காற்று உண்டாயிற்று. அவரோ நித்திரையாயிருந்தார். ஏனென்றால் அந்த படகில் இயேசு இல்லை. அப்படியிருந்தாலும் அவர்கள் அவரை உறங்க, தூங்க வைத்துவிட்டு தங்கள் சொந்த காரியங்களைக் காணவும், பேசவும் ஆரம்பித்து விட்டார்கள். ஊழிய அழைப்பையே மறந்து விட்டார்கள். ஊழிய தரிசனத்தையே இழந்து விட்டார்கள். அவ்வப்போது அவருக்கு எதிர்மறையாய், விரோதமாய் செயல் ஆற்றினார்கள். ஆகவே காற்று அவர்களுக்கு, அவர்களுடைய வேலைக்கு, கிரியைகளுக்கு எதிராக இருந்தது. வேதம் சொல்லுகிறது மத்தேயு 8:24-ல்

அதற்குள்ளாக படகு நடுக்கடலில் சேர்ந்து எதிர்காற்றாயிருந்தபடியால் அலைகளினால் அலைவப்பட்டது, நெறுக்கப்பட்டு. அவர்கள் தத்தளித்தார்கள். தடுமாறினார்கள், கதறினார்கள், காப்பாற்றனும் என்று அப்பொழுது தான் இயேசுவை நோக்கி கூப்பிட்டார்கள், உதவிக்கு அழைத்தார்கள். ஏன எதிர்காற்றில் சிக்கிக் கொண்டார்கள். இன்றைக்கு நாம் தேவனுக்கு விரோதமாய் போகும் போது, வாழும் போது எதிர் காற்றில் சிக்கிக் கொள்வோம்.



வேண்டாம் இந்த போராட்டம், வேண்டாம் இந்த பாடுகள், பல வருஷங்களுக்கு முன்பு தேவனுடைய ஊழியத்தை செய்த ஒரு தம்பி இருந்தான், அவன் எனக்குத் தெரிந்தவன், வேண்டியவனும் கூட, திடீரென தேவனுடைய ஊழியத்தை விட்டுவிட்டு ஆசிரியருக்குப் படிக்கப் போகிறேன் என்று படிக்கப் போனான். அவன் போன சில நாட்களிலே கோர்ட் ஒரு கேஸ்ஸில், வழக்கில் தீர்ப்புச் சொல்லி தேவையில்லாத, தகுதியில்லாத சில ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை மூட உத்தரவு பிறப்பித்தது. அதிலே இந்த தம்பியின் பயிற்சிப் பள்ளியும் இருந்தது. இவன் தேவனை மறந்து, ஊழியத்தை விட்டு போனதின் நிமித்தம் எல்லாம் மூடப்பட்டது. பலரும் பாதிக்கப்பட்டார்கள். காரணம் தேவனுடைய வழியை விட்டு விலகினதின் நிமித்தம் எதிர்காற்றிலே சிக்கிக் கொண்டார்கள். அதிலிருந்து காப்பாற்றப்பட, தப்புவிக்க பெரும்பாடுபட வேண்டியதாயிற்று. அதே நேரம் தேவனுடைய வழியில் நடந்து அவருடைய கட்டுப்பாட்டிற்குள் வந்தவர்கள் பாதுகாக்கப்பட்டார்கள். தப்புவிக்கப்பட்டார்கள். ஆதி 8:1-ல் தேவன் நோவாவையும், அவனுடனே பேழையிலிருந்த சகல காட்டுமிருகங்களையும், நாட்டுமிருகங்களையும் நினைத்தருளினார். தேவன் பூமியின் மேல் காற்றை வீசப்பண்ணினார் ஏறக்குறைய நூற்றைம்பது நாள் மிகவும் பிரவாகித்துக் கொண்டிருந்த தண்ணீர், வெளியே வர முடியாமல் பூமியின் மனுக்குலம் எல்லாம் அழிந்த நிலையில், நோவாவும், அவன் குடும்பமும் அழிவுக்கு விலக்கி, பாதுகாக்கப்பட்டு அற்புதமாய் வெளியே வந்தார்கள். காரணம் அந்த தண்ணீர் வற்றும்படி, வெள்ளம் வடியும்படி கர்த்தர் ஒரு காற்றை நோவாவுக்காக அனுப்பி இருந்தார். அந்த காற்று பெருவெள்ளத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றி, தப்புவித்தது. தேவன் அவருடைய வழியில் நடக்கிறவர்களை, அவருடைய சித்தங்களைச் செய்கிறவர்களை தப்புவிக்கிறார், மீட்டுகொள்கிறார். இதற்கு தேவன் தமது பண்டக சாலையிலிருந்து ஆதரவான, தப்புவிக்கிறதான காற்றை அனுப்பினார். புதிய வானம், புதிய பூமிக்குள் நடத்துகிறார்.

இதைத்தான் செங்கடலிலும், இஸ்ரவேல் ஜனங்கள் செல்லும் போது உலர்ந்த தரையாக மாற்றி, ஜனங்களை அக்கரைக்கு கொண்டு போய்ச் சேர்த்தார். யாத் 14:21-ல் மோசே தம்முடைய கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டினான், அப்பொழுது கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டு போகப் பண்ணினார். ஜலம் பிளந்து பிரிந்து போயிற்று. இதற்காகத் தான் அவர் காற்றை பண்டக சாலையில் வைத்து வைத்திருக்கிறார். விதவிதமாய், விதவிதமாய் அவற்றை ஜனங்களுடைய காரியங்களுக்கு ஏற்றார் போல், காற்றை அனுப்பி சிலரை தப்புவிக்கவும்,, சிலரை அழிக்கவும் செய்கிறார். இஸ்ரவேல் ஜனங்களை செங்கடலிலே அற்புதமாய், தண்ணீரை குவியலாக நிற்க வைத்து அவர்களை தப்புவித்தார். அந்த தேவன் இன்றைக்கு உயிரோடு இருக்கிறார். யார், யார் கொடிய வெள்ளத்தில் அகப்பட்டு, செங்கடல் போன்ற சூழ்நிலையில், சத்துரு வெள்ளம் போல வருகிறானோ அவர்களை தப்புவிக்க, மீட்க தேவன் தமது பண்டக சாலையிலிருந்து காற்றை அனுப்புகிறார், அவர்களை கரை சேர்க்கிறார். சிலருக்கு அது ஜீவ காற்றாகவும், பலருக்கு அது மரண காற்றாகவும் இருக்கிறது. இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கின்ற என் அன்பு சகோதர, சகோதரிகளே நீங்கள் பெரும் காற்றினால் அலைகழிக்கப்படாதபடி தேவனுக்கு விரோதமான காரியங்களில் சிக்கிக் கொள்ளாதபடிக்கு அவர் விருப்பத்தை அறிந்து, சித்தத்தை செய்து, அவர் வீசுகிற, அவர் நகர்த்துகிற பக்கத்தில் சென்று விடுங்கள். அப்பொழுது எதிர்காற்றுக்கும், பெரும் காற்றக்கும் தப்புவிக்கப்படுவீர்கள். அதற்குத்தான் அவர் காற்றை தமது பண்டக சாலையிலிருந்து அனுப்புகிறார்.

## உலர்ந்த எலும்புகளில் காற்று

அப்பொழுது அவர் என்னைப் பார்த்து நீ, ஆவியை நோக்கித் தீர்க்கதரிசனம் உரை, மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, ஆவியை நோக்கி, கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால் ஆவியே, நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்து வந்து கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள் மேல் ஊது என்கிறார். எசே 37:9. அடுத்ததாக காற்றை எதற்காக பண்டக சாலையிலிருந்து அனுப்புகிறார் எலும்புகள்

உயிரடைய வேண்டும் என்று. எந்த ஒரு மனிதன் தேவனை விட்டு விலகுகிறானோ அல்லது தேவனை மறக்கிறானோ அவன் உலர்ந்து போவான், பட்டுப்போவான், பச்சை மரம் பட்ட மரமாகிவிடும். இயேசு சொன்னார் யோவான் 15:6-ல் ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப் போல, அவன் எறியுண்டு உலர்ந்து போவான் என்றார். இன்றைக்கு தேவனை மறக்கிறவர்கள், அவரோடு வாழாதவர்கள் யாவரும் உலர்ந்த எலும்புகள், பட்டுப்போனவர்கள், சதையில்லாத எலும்புகள், ஜீவன் இல்லாதவர்கள் அப்படியாக எசேக்கியேல் ஒரு தரிசனத்தைக் கண்டார். அவன் ஊழியமே சுடுகாட்டில், கல்லறையில் தான் ஆரம்பித்தது. எலும்புகள் சேர்ந்து இல்லாமல், இணைந்து இல்லாமல் அக்கு வேர், ஆனி வேராக இருந்தது. செயலற்றுக் கிடந்தது. பிசாசு பிடித்த லேகியோனைப் போல கல்லறைகளில் கிடந்தார்கள். இப்படி நடைபிணமாக இருந்த இந்த எலும்புகள் பெலனடைய, உயிரடைய ஒரு ஆக்சிசன், ஒரு ஜீவ காற்று தேவைப்பட்டது. அதுதான் பரிசுத்த ஆவியானவரின் காற்று, இந்த காற்று மனிதர்கள் மேல் வந்தால் தான், எலும்புகளில் மேல் வந்தால் தான் கல்லறையில் இருப்பவர்கள், மரித்தவர்கள், மவுனத்தில் வாசம் பண்ணுகிறவ்கள் உயிரடைய முடியும். யோவான் 5:25-27-ல் மரித்தோர் தேவனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது. அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்றார். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். ஏனென்றால் பிரேத குழியிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும் என்றார். இன்றைக்கு மரித்தோர்கள் ஆத்துமாவில் யார் யார் எல்லாம் தேவனோடு தொடர்பில்லாமல் வாழ்கிறார்கள், அவர்கள் அத்தனை பேரும் உயிரடைய வேண்டுமானால் உயிர்த்தெழ வேண்டுமானால், இந்த ஜீவ காற்று எத்திசையிலிருந்தும் புறப்பட்டு வர வேண்டும், அதற்குத் தான் ஆண்டவராகிய தேவன் எசேக்கியேல் தீர்க்கதரிசியைப் பார்த்து, நீ இந்த உலர்ந்த எலும்புகளுக்கு தீக்கதரிசனம் கூறு, இந்த எலும்புகள் பிரிந்து கிடக்கிற, கூட்டை விட்டு வெளியே வந்த, தேவனுடைய பாதுகாப்பை விட்டு வெளியே வந்த அத்தனை பேருக்கும் தீர்க்கதரிசனம் கூறு என்றார். எசேக்கியேலுக்குச் சொல்லப்பட்டபடியே காற்றே நான்கு திசைகளிலுமிருந்து புறப்பட்டு வா என்று சொன்ன போது, அந்த எலும்புகள் உயிரடைந்து ஒன்று சேர்ந்து ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டு ஜீவன் அடைந்து, பெலனடைந்து உயிர் பெற்றது. தேவனுக்காக சேனையாக எழும்பியது. அது தான் தேவனுடைய உயிர் மூச்சு. ஜீவ காற்று இதைத்தான் யாத் 15:8-ல் தேவனுடைய நாசியின் சுவாசக் காற்று என்று சொல்லப்பட்டுள்ளது. ஆகவே தான் இயேசு தன் சீஷர்கள் மேல் ஊதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார். பின்வாங்கி, பிரிந்து தேவனை விட்டு விலகின சீஷர்களை மறுபடியும் ஒன்றுச் சேர்த்து, மேல் வீட்டு அறையில் காற்றை அவர்கள் மேல் அனுப்பினார். அப் 2:2 அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல் வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அவர்கள் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டார்கள், புதுப்பிக்கப்பட்டார்கள். தேவனுக்காக சேனையாய் எழும்ப ஆரம்பித்தார்கள், உயிரடைந்து ஊரெல்லாம் புறப்பட்டுப் போய் ஊழியம் செய்தார்கள். இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கின்ற என் அன்பு சகோதர, சகோதரிகளே உங்கள் எலும்புகள், சதையில்லாதபடி உயிரடையும்படி, பெலனடையும்படி ஒருமனம் உண்டாகும்படி சேனையாய் எலும்பும்படி இந்த தேவன் அனுப்புகிற பரிசுத்த ஆவி என்ற காற்று உங்கள் மேல் வீசபட வேண்டும், நீங்கள் உயிரடைய வேண்டும். அதற்குத் தான் அவர் காற்றை தமது பண்டகசாலையிலிருந்து அனுப்புகிறார்.புறப்படப்பண்ணுகிறார். இந்த காற்று தான் இஸ்ரவேல் ஜனங்களுடைய உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்தது. எண் 11:31-ல் அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட ஒரு காற்று சமுத்திரத்திலிருந்து கடைகளை அடித்துக் கொண்டு வந்தது. இன்றைக்கு உங்கள் தேவைகள் பூர்த்தியாக, உங்களுக்கு அற்புதம் நடக்க இந்த காற்று அவசியம். இந்த காற்று அனுதினமும் உங்கள் மேல் வீச வேண்டும். மட்டுமல்ல 2 ராஜா 2:1, 11-லும் கர்த்தர் எலியாவை சுழல் காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் போகிறபோது எலியா, எலிசாவோடு கூட கில்காலிலிருந்து புறப்பட்டுப் போனான். அவர்கள் பேசிக் கொண்டு நடந்து போகையில், இதோ, அக்கினி ரதமும், அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது. எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான். இந்த காற்று நம்மேல் வீசும் போது, அப்பொழுது தான் நாம் மேலே ஏறிப்போக முடியும். நம்மை பரலோகம் கொண்டு சேர்ப்பதற்காகத் தான் தேவன் இந்த காற்றை நமக்கு பண்டகசாலையிலிருந்து அனுப்புகிறார். அதனால் நாம் உயிரடைந்து, பெலனடைந்து ஒரு பெரிய சேனையாய் எழும்பி, நாம் உயர உயர பறக்க, பரலோகம் போக நம்மை பயிற்றுவித்து காற்றை பண்டக சாலையிலிருந்து அனுப்புகிறார். நம்மை சேனையாய் மாற்றுகிறார். வாரும் வாரும் காற்றாய் வாரும், அக்கினியாய் வாரும். அதற்காகத்தான் தேவன் அவருடைய பிள்ளைகள் மேல் காற்றை அனுப்புகிறார். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்கள் மேல் தம்முடைய ஆவியை ஊதி உயிருள்ளவர்களாக மாற்றி, பலத்த சேனையாய் எழும்பப்பண்ணுவாராக.

# இனி நீ தொய்ந்து போவதில்லை

சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

வாழ்க்கையில் நாம் சந்திக்கும் அன்றாடப் பிரச்சனைகள் நடுவில், போராட்டத்தின் மத்தியில் எப்படி இவைகளை சமாளிப்பது என்ற கலக்கத்தில் மனம் தளர்ந்து நாம் தொய்ந்து போகிறோம். அப்படிப்பட்ட நம்மைப் பார்த்து எரே 31:11,12-ல் கர்த்தர் யாக்கோபை மீட்டு, அவனிலும் பலத்தவனுடைய கைக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிறார். அவர்கள் வந்து, சீயோனின் உச்சியிலே கெம்பீரித்து, கர்த்தர் அருளும் கோதுமை, திராட்சரசம், எண்ணெய், ஆட்டுக்குட்டிகள், கன்றுக்குட்டிகள், என்பவைகளாகிய இந்த நன்மைகளுக்காக ஓடிவருவார்கள், அவர்களுடைய ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம் போலிருக்கும், அவர்கள் இனி தொய்ந்து போவதில்லை என்கிறார்.

## ஏன் நமக்கு தொய்வு ஏற்படுகிறது

நமது வருமானம் பத்தாயிரம் என்றால் செலவு பதினைந்தாயிரம் ஆகி விடுகிறது. அந்த தேவைக்கு அந்த இடத்தில் பள்ளம், தொய்வு ஏற்படுகிறது. ஒரு கொடி கட்டி துணிகளைக் காயப்போடுகிறோம். எவ்வளவு பளு அதன் மேல் ஏற்றுகிறோமோ நாளாக நாளாக கொஞ்சம் கொஞ்சமாய் அது தொய்வு ஏற்பட்டு இறங்கி விடுகிறது. வேலைப்பளு அதிகமாகிறதினால் சரீரத்தில் ஒரு தொய்வு ஏற்படுகிறது. சங் 57:6-ல் என் கால்களுக்குக் கண்ணியை வைத்திருக்கிறார்கள். என் ஆத்துமா தொய்ந்து போயிற்று, சத்துருவினால் வரும் மறைவான கண்ணி. நமக்கே தெரியாமல், நமக்கு விரோதமாய் கால்களுக்கு, நாம் நடந்து போகிற பாதையில் கண்ணியை வைத்துத்தான் நம்மை இடறப்பண்ணுகிறார்கள். பிள்ளைகள் நன்றாய் படித்துக் கொண்டு வரும்போதே எனக்குப் படிக்க பிடிக்க வில்லை, நான் இனி படிக்க போக மாட்டேன் என்று அடம் பிடிக்கிறார்கள் ஏன்? பிள்ளைகளுக்கு என்ன ஆலோசனை சொன்னாலும் கேட்கவில்லை.

வாலிப வயதில் முரட்டாட்டம், நீ என்ன சொல்வது நான் அதை கேட்க வேண்டுமோ எனக்குத் தெரியும் என்பார்கள். சில பேர் இவளைத்தான், அவனைத்தான் திருமணம் செய்வேன் என்று பிடிவாதம் பண்ணுவார்கள். திடீரென்று நன்றாய்ப் போன தொழில் நஷ்டமடைந்து விட்டது. வியாபாரமே நடக்க மாட்டேன்கிறது ஏன்? என்ன சூன்யமோ எல்லாமே எதிராய் நடக்கிறது என்று கலங்குகிறீர்களா? சங் 57:6-ன் பிற்பகுதியைப் பாருங்கள் எனக்கு முன்பாக குழியை வெட்டி அதின் நடுவிலே விழுந்தார்கள். இது தான் நமக்கு எதிராய் கண்ணியை வைத்தவர்களுக்கு நேரிடும் பேராபத்து. சங் 88:9 துக்கத்தினால் என் கண் தொய்ந்து போயிற்று, கர்த்தாவே, அனுதினமும் நான் உம்மை நோக்கிக் கூப்பிட்டு, உமக்கு நேராக என் கைகளை விரிக்கிறேன். ஏதோ ஒரு துக்கம், ஏதோ ஒரு பாதிப்பு, இதினிமித்தம் உண்டாகிற தொய்வு. துக்கம் மனதில் இருக்கும் போது தூக்கம் வராது. தூங்காத கண்களைப் பாருங்கள், பார்த்த உடனே தெரியும். அதில் ஒரு சோர்வு, தொய்வு, சரியாய் தூங்காததினால் அஜீரணம் சாப்பிட முடியாது. அது அடுத்த பலவீனங்களுக்குள் கொண்டு போய் விடுகிறது. யோவான் 11:11,12-ல் இயேசு, சீஷர்களை நோக்கி, நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான் நான் அவனை எழுப்பப்போகிறேன் என்றார். அதற்கு அவருடைய சீஷர்கள், ஆண்டவரே, நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான் என்றார்கள். அவர் தூங்கி இளைப்பாறுகிறதைப் பற்றி சொல்கிறார் என்று நினைத்தார்கள். தூங்கி இளைப்பாறினால் நல்ல உடல் ஆரோக்கியம் உண்டாகும். எங்கே தூங்க முடிகிறது. நாளைய தினத்தைக் குறித்த கவலை, பிள்ளைகளைக் குறித்த கவலை, விலைவாசி உயருகிறதைக் குறித்த கவலை, செய்ய வேண்டியதைப் பற்றிய கவலை, செய்ய முடியாததை, செய்ய தவறியதை நினைத்து கவலை இவைகளைப் போன்று இன்னும் எத்தனையோ பாரங்கள், இவைகளை நினைத்து துக்கத்தினால் என்

கண்கள் தொய்ந்து போய்கிறது. அவைகளின் மத்தியில் இந்த சங்கீதக்காரன் வேறு எந்த உதவியையும் நாடாமல், யாரையும் நம்பாமல் கர்த்தரை நோக்கி கூப்பிட்டு கைகளை விரிக்கிறான். கர்த்தரை நோக்கிக் கூப்பிட்ட ஒருவரையும் அவர் கைவிடுவதில்லை. வெட்கப்பட விடுவதில்லை.

## ஆலோசனையை கேளுங்கள்

மோசே நல்ல தலைவன், அவனை வைத்து பல லட்சம் ஜனங்களை விடுதலைக்குள் நடத்தினார். தேவனோடு நடக்கிற, தேவ சத்தம் கேட்கிற மனிதன். எகிப்தில் தேவ ஜனங்களை விடுதலை ஆக்க, அவன் பட்ட பிரயாசங்கள், சந்தித்த அவமானங்கள் கொஞ்சமல்ல. அவன் இன்று விடுதலையாகி விடலாம் என்று ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்தான். ஆனால் பார்வோனின் இருதயம் கடினப்பட்டது. தாமதமாகிக் கொண்டே போகிறது, அரண்மனைக்கும், வீட்டிற்கும், தேவ ஜனத்திற்கும் என்று நடந்து கொண்டே இருந்தவன். இவைகளின் நடுவில் மனைவி, பிள்ளைகளை தன் மாமன் வீட்டிற்குத் திரும்பி அனுப்பி விட்டிருந்தான். இப்போது தன் மகள் சிப்போராளையும், பேரப்பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு மோசேயைப் பார்க்க எத்திரோ என்ற மாமன் வருகிறான் மறுநாள் காலமே எழுந்து மோசே, ஜனங்களை நியாயம் விசாரிக்கத் தொடங்கினான். சாயங்காலம் மட்டும் ஜனங்கள் மோசேக்கு முன்பாக நின்றார்கள். யாத் 18:13-24 வரை சொல்லப்பட்டுள்ளது. எத்திரோ இதைப் பார்த்து நீர், ஜனங்களுக்குச் செய்கிற இந்த காரியம் என்ன? நீர் ஒன்றியாய் உட்கார்ந்திருக்கவும் ஜனங்கள் காலமே துவங்கி சாயங்காலமட்டும் உமக்கு முன்பாக நிற்க வேண்டியதென்ன? என்றான். உடனே மோசே நான் ஊழியம் செய்கிறேன், ஜனங்கள் தேவனிடத்தில் விசாரிக்கும்படி என்னிடத்தில் வருகிறார்கள். அவர்களுக்குள்ள காரியங்கள், வழக்குகள் இவைகளை கொண்டு வரும்போது, நான் அதை தீர்த்து தேவ கட்டளைகளையும், பிரமாணங்களையும் அவர்களுக்கு தெரிவிக்கிறேன் என்றான். அதற்கு மோசேயின் மாமன் நீர் செய்கிற காரியம் நல்லதல்ல. நீரும் உம்மோடே கூட இருக்கிற ஜனங்களும் தொய்ந்து போவீர்கள். இது உமக்கு மிகவும் பாரமான காரியம். நீர் ஒருவராய் அதைச் செய்யகேளும், உமக்கு ஒரு ஆலோசனை சொல்லுகிறேன், தேவனும் உம்மோடு கூட இருப்பார். நீர் தேவ சந்நிதியில் ஆலோசனைக்காக இரும், விசேஷித்தவைகளை தேவனிடத்தில் கொண்டு போய் ஜெபம் பண்ணுவதில் நீர் இரும். அதற்கென்று ஆட்களை நியமித்து, தேவனுக்குப் பயந்த, உண்மையான, பொருளாசையை வெறுக்கிற திறமையுள்ள மனிதரை தெரிந்து ஏற்படுத்தும் அவர்கள் அதையெல்லாம் பார்த்துக் கொள்ளட்டும். தங்களால் தீர்க்க முடியாத பெரிய காரியங்களை மட்டும் உம்மிடம் கொண்டு வரட்டும். உம்மாலே கூடாது. இப்பொழுது என் சொல்லைக் சிறிய காரியங்களை அவர்கள் பார்த்துக் கொள்ளட்டும். இப்படி இந்த பாரத்தை சுமந்தால் உமக்கு இலகுவாயிருக்கும். நீரும் போகும் இடத்துக்கு சுகமாய் போய்ச் சேரலாம் என்றான். மோசே தன் மாமன் சொல்கேட்டு அவன் சொன்னபடியெல்லாம் செய்தான். சரியான நேரத்தில், சரியான ஆலோசனை யார் மூலமாகவும் வரலாம். சிறுபிள்ளையிடம் இருந்து கூட வரலாம். அந்த ஆலோ-சனையை நாம் ஏற்றுக்கொண்டு அதன்படி நாம் செய்கிறபோது நமக்கு இலகு உண்டாகும். ஆனால் நீ என்ன சொல்லுகிறது? நான் அதைக் கேட்க முடியாது என்பதனால் தான் அநேகக் குடும்பங்களில் பிரச்சனை ஏற்படுகிறது. நான் தேவ ஆலோசனையைக் கேட்பேன், மனித ஆலோசனையை கேட்க வேண்டியதில்லை என்று சொல்ல முடியாது. தேவ ஆலோசனையைத் தான் கேட்க வேண்டும். சில வேளைகளில் இதைப்போல மனித ஆலோசனைகள் நமக்குத் தேவை. அவை தரப்படும்போது தாழ்மையோடு ஏற்றுக்கொண்டு, தேவனிடம் ஜெபித்து நல்லவைகள், சரியானவைகளை நாம் செய்யத் தொடங்கினால் நமக்கும் இலகு உண்டாகும், சுமை குறையும், நமது பயணம் சுகமானதாய் இருக்கும். தடுமாறத் தேவையில்லை. அதைத்தான் எத்திரோ, நீர் போகும் இடத்திற்கு சுகமாய் போய்ச் சேரலாம் என்றான். நமக்கு ஆலோசனை சொல்லுகிறவர் சிறியவரோ, பெரியவரோ அது சிறிய ஆலோசனையோ, பெரிய ஆலோசனையோ, சரியான ஆலோசனைகளுக்கு செவி கொடுத்து செயல்பட்டால் இந்த தொய்விலிருந்து வெளியே வரலாம். அது ஆவிக்குரிய ஆலோசனையாக இருந்தாலும், உலகப் பிரகாரமான ஆலோசனையாக இருந்தாலும் செவி கொடுத்து இந்த தொய்வை சரி செய்யுங்கள்

## கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்

பல நேரங்களில் பாடுகள் சூழ்ந்திருக்கும் வேளைகளில் முதல் முயற்சியாக நாம் மனிதர்களை கூப்பிடுவோம். எனக்கு ஏதாவது செய்யுங்கள் என்பதாக எதிர்பார்ப்போம். ஆனால் மனிதர்களால் முடியாமல் போகும் போது தான் தெய்வத்தை நோக்கி கூப்பிடுவோம். ஆனால் சங் 143:7-ல் கர்த்தாவே, சீக்கிரமாய் எனக்குச் செவிகொடும்,ன் ஆவி தொய்ந்து போகிறது. நான் குழியில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பாகாதபடிக்கு, உமது முகத்தை எனக்கு மறையாதேயும் என்று சொல்லி சங்கீதக்காரன் ஜெபிக்கிறான். கர்த்தாவே, சீக்கிரமாய் எனக்கு செவிகொடும் என்று சொல்லும் போது ஏதோ ஒரு அவசரமாய் நிறைவேற வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறான் அல்லது நீண்ட நாட்களாய் காத்துக் கொண்டிருக்கிறான், இப்போது உடனே நடக்க வேண்டிய கட்டாய சூழ்நிலைகளில் இருக்கிறான். அதனால் தான் கர்த்தாவே நீ எனக்கு சீக்கிரமாய் செவிகொடும்,

கூப்பிட்டு விட்டான். நமக்கு இப்படிப்பட்ட சூழலில் நாமும் கர்த்தரை நோக்கி கூப்பிடுகிற போது அவர் நமக்கு செவிகொடுத்து நம்முடைய இன்னல்களை மாற்றி, நம் ஆவி தொய்ந்து போகாதபடி காப்பார்.

சங் 61:2-ல் என் இருதயம் தொய்யும் போது பூமியின் கடையாந்தரத்திலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன். எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டு போய் விடும் என்றான். இவன் இருதயம் தொய்யும் போது பூமியின் கடையாந்தரத்திலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன். எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டு போய் விடும் என்றான். இவன் இருதயம் தொய்யும் போது எங்கிருக்கிறான் என்றால் பூமியின் கடையாந்தரங்களில் இருக்கிறானாம். எங்கோ ஒரு மூளையிலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறான். எனக்கு எட்டாத உயரமாகிய கன்மலையில் என்னைக் கொண்டு போய் விடும் என்ற அவனை தேவன் கைவிடவில்லை ராஜசிங்காசனத்தில் உயர்த்தினார். முடிந்தது அவ்வளவு தான் என்று நினைக்கிற ஒருவர் வாழ்வை உயர்த்தக்கூடிய ஒருவர் தான் நம் ஆண்டவர் இயேசு. யோனா தேவ மனிதன், ஆனால் தேவசத்தம் கேட்டு, அவர் சித்தத்தின்படி வாழாதவன். ஆண்டவர் ஒரு பக்கம் போகச் சொன்னால் வேறு திசையில் சென்றவன். அவனைத் தன் திசையில் திருப்ப சில சிட்சையில் நடத்த வேண்டியதாயிருந்தது. ஒரே கொந்தளிப்பு, அத்தனை கொந்தளிப்பும் வந்தும் அவன் அதைப்பற்றி கவலைப்படாமல் கப்பலின் அடித்தட்டில் தூங்கிக் கொண்டிருந்தான். மற்றவர் எழும்பின பிறகுதான், தன் நிமித்தம் தான் இந்த கொந்தளிப்பு என்று அறிந்து கொண்டான். அதற்கு என்ன நிவாரணம்? கொந்தளிப்பு நிற்க என்னை தூக்கி கடலில் எறிந்து விடுங்கள் என்றான். அப்படியாவது இதிலிருந்து தப்ப நினைத்தான். ஆனால் நான் வானத்துக்கு ஏறினாலும் நீர் அங்கேயும் இருக்கிறீர், பாதாளத்துக்குச் சென்று படுக்கையைப் போட்டாலும் அங்கேயும் நீர் இருக்கிறீர் என்று தாவீது சொல்கிறது போல, பாதாளத்துக்குப் போனால் தேவ சத்தத்திற்கு தப்பிவிடலாம் என்று நினைத்த அவனை விழுங்க ஒரு மீனுக்கு தேவன் கட்டளையிட்டார். மீன் மூச்சு விடும்போதெல்லாம் தண்ணீர் அவனை நிறைத்தது. கடல் பாசிகள் அவனைச் சுற்றி சூழ்ந்தது. அவனால் மூச்சுவிட முடியவில்லை ஒரு திராணியும் இல்லை. யோனா 2:7-ல் என் ஆத்துமா என்னில் தொய்ந்து போகையில் கர்த்தரை நினைத்தேன், அப்பொழுது என் விண்ணப்பம் உமது பரிசுத்த ஆலயத்திலே உம்மிடத்தில் வந்து சேர்ந்தது. 2-ஆம் வசனத்தில் என் நெருக்கத்தில் நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், அவர் எனக்கு உத்தரவு அருளினார். நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன். நீர் என் சத்தத்தைக் கேட்டீர் என்கிறான். அவன் இருதயம் தொய்யும் போது கர்த்தரை நினைத்தான். நான் ஒழுங்காக தேவன் போகச் சொன்ன இடத்துக்கு போயிருந்தால் இப்போ இந்த இடத்துக்கு வந்திருக்கமாட்டேன் என்று அவரை நோக்கி கூக்குரலிட்டான். தேவனே என்னைக் காப்பாற்றும், இந்த நாற்றம் எனக்கு குமட்டுகிறது மீன் அங்கும் இங்கும் ஓடுகிறது எனக்கு தலைசுற்றுகிறது, இந்த தண்ணீரிலே என் வாழ்வு முடியப்போகிறதா? இன்னும் என்ன சொல்லி கதறினானோ தெரியாது. தேவன் மீனுக்குக் கட்டளையிட்டார், போதும் யோனா மனம் வருந்திவிட்டான். அவனைக் கரையில் கொண்டு போய் விட்டுவிடு என்றார். மீன் கரையில் கக்கிவிட்டது.



பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூப்பிடுகிற ஒவ்வொரு குரலையும் ஆண்டவர் கேட்கிறவர். உங்கள் வாழ்வில் மிகவும் தொய்ந்து போனீர்களா? இனி எழும்ப முடியுமா என்று எண்ணுகிறீர்களா? இன்னும் உங்களுக்கு நம்பிக்கை உண்டு, கர்த்தரை நோக்கி கூப்பிடுங்கள் இந்த நெருக்கத்தில் உங்களை அவர் விடுவிப்பார்.

## தேவ வார்த்தைக்கு செவிகொடுங்கள்

இயேசுவைத் தேடி திரளான ஜனங்கள் கூடி வந்தார்கள். அவர்களை இயேசு கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்து போனவர்களும், சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி, அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம், ஆதலால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி வேண்டிக் கொள்ளுங்கள் என்றார் மத்தேயு 9:36-38, இதை மாற்கு 6:34-ல் அவர்கள் மேல் மனதுருகி, அநேக காரியங்களை, அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார். நாம் தொய்ந்து போகும் போது தேவ வார்த்தையை வாசிக்க, தியானிக்க ஆரம்பித்தால் அந்த வார்த்தையில் இருக்கும் ஜீவன் நம்மை வாழ வைக்கிறது. சங் 39:3-ல் என் இருதயம் எனக்குள்ளே அனல் கொண்டது, நான் தியானிக்கையில் அக்கினிமூண்டது, அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் செய்தேன். தேவனுடைய வார்த்தையால் நமக்கு அனல் மூட்டப்படுகிறது. அப்படியில்லாமல் நம் ஆத்துமாவில் அனல் இல்லாவிட்டால், ஆத்தும ஆகாரத்தை நாம் கொடுக்காவிட்டால் நம் ஆத்துமா தொய்ந்து போகும். அதனால் தான் மேய்ப்பனில்லாத

ஆடுகளைப் போல தொய்ந்து போயிருந்த திரளான ஜனங்களோடு இயேசு பேசி அவர்களைப் பெலப்படுத்தினார். அவர் வழியாக பேசிய தேவ ஆவியானவர் இருதயங்களை ஆற்றி தேற்றி நல்வழிப்படுத்தி சீர்படுத்தினார். இன்றைக்கும் ஆண்டவர் நம்மோடு இப்படி பேசி நம்மை ஆவியானவர் வழியாய் திடப்படுத்துகிறார். எரே 31:25-ல் நான் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப்பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். இதுவரை நாம் எப்படிப்பட்ட சூழலில் போயிருந்தாலும் எரே 31:10-12-ன்படி மேய்ப்பன் இல்லாத ஆடுகளாக அவைகள் தொய்ந்து போவதில்லை. கர்த்தர் யாக்கோபை மீட்டு அவனிலும் பலத்தவனுடைய கைக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிறார். அவர்களுடைய ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம் போலிருக்கும், அவர்கள் இனித் தொய்ந்து போவதில்லை என்கிறார். ஆத்துமா தொய்ந்து போனதா? தொய்ந்து போன நிலையை மாற்றுகிற இயேசு நம் கூக்குரலைக் கேட்டு, நம் நிலையைப் பார்த்து நம் சிறையிருப்புகளை மாற்றி பல வித நன்மைகளை நமக்கு அருளுவார். நாம் தொய்ந்து போவதில்லை. என் ஆண்டவர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து பலப்படுத்திநிறுத்துவாராக.



## முக்கிய அறிவிப்பு !

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிகைக் கடந்த 25 வருடத்திற்கு மேலாக அச்சடிக்கப்பட்டு வெளிவந்தது.இப்பொழுது பத்திரிக்கை அச்சடிக்கப்படுவதற்க்கு மட்டும் மாதம்தோறும் ரூ 50,000-க்கு மேல் செலவு செய்யப்படுகிறது.இதனால்,வருகிற மாதம் முதல் பத்திரிக்கை அச்சடிப்பைக் குறைத்து **Digital** முறையில் நம்முடைய இணையதளம் **www.jesuslives.in/resoruces** மற்றும் அனைத்து இயேசு வாழ்கிறார் சமூக வலைத்தளங்களில் வெளிவரும் அதில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். உங்கள் வாட்சப்பில் மாதந்தோறும் பெற 9442800449 என்ற எண்ணிற்கு **"Send Magazine"** என **Type** செய்து அனுப்பினால் மாதந்தோறும் உங்களுக்கு பத்திரிக்கை அனுப்பப்படும்.






# School of EVANGELISM































கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும், அவருடைய வழிநடத்துதலினாலும் இந்த உலகத்தையும், நம் தேசத்தையும் சூழ்ந்திருக்கும் இருளை அகற்ற சுவிசேஷம் என்ற ஒளியினை பரவச்செய்யவும், இயேசு ராஜாவின் பிரதானக் கட்டளையை நிறைவேற்றவும், தேவனுடைய இராஜ்ஜியத்தை ஜனங்களுக்குள் கொண்டுவரவும் தேவன் கொடுத்த இந்த பாரத்திற்காகவும், பணிக்காகவும் அவரை துதிக்கிறேன். *கடந்த மாதம் 17-23* ஆம் தேதி வரை நமது வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையத்தில் வைத்து நடைபெற்ற **(School Of Evangelism)** சுவிசேஷ பயிற்சிப் பள்ளியை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து நடத்தினார். இந்திய தேசத்தின் பல மாநிலங்களில் இருந்து வந்து, எப்படியாகிலும் சுவிசேஷத்தை ஜனங்களுக்கு சொல்ல வேண்டும் என்ற வாஞ்சையும், பாரமும், அர்ப்பணிப்புமுள்ள 40 பேர் (சுவிசேஷகர்கள், சுவிசேஷகிகள்) இந்த பயிற்சிப் பள்ளியில் வந்து கலந்து கொண்டு, சுவிசேஷத்தை யாருக்கு, எந்த இடத்தில், எந்த சூழ்நிலையில், எப்படி அறிவிக்க வேண்டும் என்பதை முறையாகவும், தெளிவாகவும் சொல்ல வேண்டும் என்பதை கற்றுக்கொள்ள தேவன் கிருபை செய்தார். முதல் நாள் சகோதரர். வின்செண்ட் செல்வகுமார் அவர்கள் முதல் பகுதியை ஜெபத்துடன் ஆரம்பித்து வைத்து, ஆவியானவர் கற்றுக் கொடுக்க சொன்ன காரியங்களை கற்றுக் கொடுத்தார்கள். அதை தொடர்ந்து சகோதரர். மோகன.C.லாசரஸ் அண்ணன் அவர்களும் ஆவியானவரின் நடத்துதலின்படியும், தங்கள் அனுபவத்தோடும் கற்றுக்கொடுத்தார்கள். சகோதரர்.L.வின்செண்ட்ராஜ், Ps.ராஜாசேகர் Ps,ஜான் K சகோதரி. கலாவின்செண்ட்ராஜ் அவர்கள் பாடல், ஆராதனை, ஜெபம், அனுபவ சாட்சிகளோடு பாடங்களை கற்றுக்கொடுத்தார்கள். உலகம் எங்கும் சுவிசேஷ ஒளியை பரவச்செய்யும் பணியில் தேவன் பயன்படுத்தும் பாத்திரங்களாக செயல்படப் போறதற்காக நான் கர்த்தரை துதிக்கிறேன். தொடர்ந்து எந்த தடையும் இல்லாமல் நடத்த எங்களுக்காக அதிக பாரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# உங்கள் அற்புதத்தின் நாள்

மதுரை




# உங்கள் அற்புதத்தின் நாள்

**மாதந்தோறும் மூன்றாவது சனிக்கிழமை மதுரையில் நடைபெறும்**

கடந்த ஜீலை 16-ஆம் தேதி மதுரையில் நடந்த உங்கள் அற்புதத்தின் நாள்  அநேக மக்கள் கலந்து கொள்ள தேவன் கிருபை செய்தார். கூட்டத்தின் ஆரம்பம் முதல் முடிவு மட்டும் தேவ ஆவியனவரின் ஆளுகையும், தேவ பிரசன்னமும் அந்த இடம் முழுவதும் நிரப்பியிருந்தது. ஜெபம் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் எவ்வளவு முக்கியம் என்றும், ஜெபத்தின் மேன்மைகளைக் குறித்தும், ஆசீர்வாதங்களைக் குறித்தும் சகோதரர். L.வின்செண்ட்ராஜ் (இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்) அவர்கள் கொடுத்த ஆலோசனை அநேகருக்குள் நாம் கட்டாயம் ஜெபிக்க வேண்டும் என்ற தாக்கத்தையும், வாஞ்சையையும், ஜெபபாரத்தையும் கொடுத்து அவர்களை நிரப்பிற்று. இறுதியாக சகோதரர். G.P.S  ராபின்சன் அவர்கள் கொடுத்த தேவசெய்தியின் மூலம் அநேகர் விடுதலையையும், நிம்மதியையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுச்செல்ல தேவன் கிருபை செய்தார்.தேவனுக்கு ஸ்தோத்திரமும், கனமும், மகிமையும் உண்டாவதாக.

# எனது புதிய சிறந்த நண்பன்




வாலிபர் பகுதி: சகோதரி.பிரேமா டேவிட்

"ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும், அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை, நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" யோவான் 15:13,14.

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே, நம் ஒவ்வொருவருக்காக தன் உயிரையே கொடுத்த நல்ல நண்பனான நம் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். ஒரு **Phone** ரீஸிவர் படமும் அதன் பக்கத்தில் **My New Best Friend** என்று எழுதப்பட்டிருந்த ஒரு நோட்டு அட்டையை நான் பார்த்த போது பேனா நண்பர்கள் என்ற அந்த காலம் போய், **Phone** நண்பர்கள் என்ற இந்தக் காலத்தில் அவர்கள் உண்மையான நண்பர்களாயிருப்பார்களா? என்று யோசித்தேன். இன்றைக்கு நேருக்கு நேர் பேசுகிறது மாதிரி **Phone**-ல தான் அதிகம் பேர் பேசிக்கொண்டேயிருக்கிறதைப் பார்க்கிறோம். நீங்கள் எப்படி? உன் நண்பன் யாரென்று சொல், நீ யாரென்று சொல்கிறேன் என்ற பழமொழியைக் கேட்டிருப்பீர்கள் தானே. உங்களது நண்பர்கள் என்பவர்கள் உண்மையிலே நல்லவர்களா?, வேதம் காட்டும் வழியில் நடக்கிறவர்களாக இருந்தால் நல்லது. நீங்கள் எப்படியும் தப்பி விடலாம். நீ குடிக்க வேண்டாம் சும்மா என்னோடே வா என்ற நண்பனின் பாசத்திற்கு இணங்கிச் சென்று, கூடப் போன யாராவது குடிக்காமல் வந்தார்களா? என்றால் இல்லை குடிக்கு அடிமையாய்ப் போனார்கள் என்பதே உண்மை. கோபக்காரனுக்கு தோழனாகாதே, உக்கிரமுள்ள மனுஷனோடே நடவாதே, அப்படிச் செய்தால் நீ அவனுடைய வழிகளைக் கற்றுக்கொண்டு, உன் ஆத்துமாவுக்குக் கண்ணியை வருவிப்பாய் நீதி 22:24,25. அதனால் தான் இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து ஆண்டவர் சொன்னார் அவர்களோடும், அவர்கள் தேவர்களோடும், (பழக்கங்கள், வழிமுறைகள்) நீ உடன்படிக்கை பண்ணாதிருப்பாயாக. அவர்கள் உன்னை எனக்கு விரோதமாகப் பாவம் செய்யப்பண்ணாதபடிக்கு, உன் தேசத்திலே குடியிருக்க வேண்டாம். நீ அவர்கள் தேவர்களைச் சேவித்தால், அது உனக்கு கண்ணியாயிருக்கும் யாத் 23:32,33. உங்கள் நண்பர்கள் அழிவின் பாதையில் செல்கிறவர்களாய், அதை செய்கிறவர்களாயிருந்தால் நீங்களும் எளிதில் அதை கற்றுக் கொள்கிறவர்களாய், அவர்களைப் போல, அவைகளைப் போல மாற வாய்ப்பு உண்டு. நீங்களே சிறந்த நண்பனாயிருந்து, சிறந்த தோழியாயிருந்து விட்டால் உங்களை நீங்களே காத்துக் கொள்ளலாம், அவர்களையும் காப்பாற்றிவிடலாம். அப்பொழுது அவர்களும், நீங்களும் ஒருவரையொருவர் பார்த்து சொல்லலாம் **My New Best Friend** என்று.

## பாரபட்சமின்றி எல்லோரிடமும் பழகுங்கள்

நன்றாய் படிக்கிறவனாக, குறைந்த மதிப்பெண் எடுக்கிறவனாக, அழகான, அழகில்லாத, வசதி படைத்த, வசதியில்லாதவராக, கிராமப்புற, நகர்ப்புற சூழ்நிலையுள்ளவராக, எந்த இனம், மதம் வித்தியாசமின்றி எல்லோரிடமும் நன்றாய் பேசுங்கள். உங்களால் முடிந்த படிப்பிலோ, பண உதவியோ, உணவோ கொடுத்து உதவி செய்யுங்கள். தவறான உதவி மட்டும் செய்து விடாதீர்கள். அந்தப் பையனை இந்தப் பெண்ணோடு **Connect** பண்ணிவிடாதீர்கள். நன்றாய்ப் பழகுங்கள் என்று சொல்வதாலே,

எப்பவும் **Friend, Friend** வீடு என்றிருக்காதீர்கள். படிக்க **Friend** வீட்டிற்குப் போறேன்னு சொல்லிவிட்டு எங்கேயாவது போய் விளையாடி விடாதீர்கள். **Friend**-ஐ பிரிந்து என்னால் இருக்கவே முடியாது என்ற நிலைக்குப் போய் ஓரினச் சேர்க்கை பாவங்களில் சிக்கிக் கொள்ளாதீர்கள். குறிப்பாக ஜெபம், இயேசுவை விட்டுப் பிரிக்கும் நட்பு வேண்டாம் என விலகி விடுங்கள். பட்சபாதமுள்ளவர்களாயிருப் பீர்களானால், பாவஞ்செய்து, மீறினவர்களென்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள் யாக் 2:9. நீங்கள் தவறான காரியங்களை பேசமாட்டீர்கள், தவறான இடத்திற்கு போக மாட்டீர்கள். தவறான காரியத்துக்கு ஒத்துப் போக மாட்டீர்கள் என்று உங்கள் நண்பர்களுக்கு தெரிந்திருப்பதாலே உங்கள் மதிப்பு கூடுமே தவிர, உங்கள் வாழ்க்கை எந்த விதத்திலும் குறைந்து போகாது. நான் **School**-ல படிக்கும் போது ஹாஸ்டலில் இருக்கிற அனைவரும் சினிமா பார்த்தாலும், நான் சினிமா பார்க்காமல், ஒரு சிலரை என்னோடு சேர்த்து ஜெபிக்க ஆரம்பித்தேன். பிள்ளைகள் தங்களது மனக்கஷ்டங்களை, வீட்டுக் கஷ்டங்களை என்னிடம் சொல்ல ஆரம்பித்தார்கள். அவர்களுக்காக ஜெபிக்கும் போது கர்த்தர் அவர்களுக்கு விடுதலை கொடுத்தார். அவர்களும் ஜெபிக்க கற்றுக் கொண்டார்கள். இதைப் பார்த்த ஜெபத்திற்கு வராத பிள்ளைகள் ஒன்று சேர்ந்து ஏதோ பேசிக் கொண்டிருப்பார்கள். என்னைப் பார்த்தவுடன் பிரேமா வருது பேசாதீங்கப்பா என்பார்கள். எனவே தீய காரியங்களுக்கு மட்டும் உடன்படாமல் எல்லாரிடமும் நன்றாய் பழகுங்கள்.

## இறுதிவரை அன்பான நண்பராயிருங்கள்

இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே, முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார் யோவான் 13:1. **Friend** என்ற வார்த்தையில் ஒரு அர்த்தத்தை நான் தெரிந்து கொண்டேன். **Friday**- பள்ளி நாட்களில் வெள்ளிக்கிழமை வரை மட்டுமல்ல, அதாவது தேவைப்படும் போது மட்டுமல்ல, காசு இருக்கும் வரை அல்ல **Week end**- வார நாட்களின் இறுதி வரை கூட இருப்பவர்களே சிறந்த, நல்ல நண்பனாயிருக்க முடியும். பார்த்தவுடனே **Friend** பிடிக்கிறது, பார்க்காமலே **Insta, Whats app, Face book Friends** எல்லாம் கேள்விக்குறி தான்? என்னோடு **Class mate** ஒரு வசதியான பெண். அம்மா, அப்பா, டீச்சர் என தொணத்தொண என்று பேசுவாள். எப்பொழுதும் படித்துக் கொண்டேயிருப்பாள். பிள்ளைகள் எல்லோரும் புத்தகப்புழு என்று கேலிபண்ணுவார்கள். அந்தச் சமயம், அவர்கள் வீட்டில் அம்மா, அப்பாவுக்கிடையே சண்டை, அவளுக்கு வேற சுகமில்லை, ஹோமியோபதி மாத்திரை எடுத்துக் கொண்டிருந்தாள். அவள் பேசினால் ஒரு **Bad Smell** வரும். அதோடு அவளால் **Concentrate** பண்ணி படிக்க முடியாமல் பக்கத்திலிருக்கிற **Box**-ஐ எடுத்து முன்னால் வைப்பாள். முன்னால் வைத்த **Box**-ஐ பின்னால் வைப்பாள் அவளால் கவனமாகப் படிக்க முடியாமல் மன நிலைமையும் பாதிக்கப்பட்ட, அந்தச் சூழ்நிலையில் நான் அவளுக்கு ஆண்டவரைப் பற்றிச் சொல்லி ஜெபித்தபின் அவளால் நன்கு படிக்க முடிந்தது. அந்த வருடம் **10th Public Exam** எழுதுவாளா என்ற நிலையில் 434 மதிப்பெண் பெற்று வெற்றி பெற்றாள். அவள் வாய் நாறுதே, எப்படி நீ மட்டும் அவளிடம் பேசுகிறாய் என்று பிள்ளைகள் கேட்பார்கள். நன்றாயிருக்கும் போதல்ல துன்பத்திலும், இறுதிவரை நல்ல, சிறந்த நண்பராயிருங்கள். இயேசுவே நமக்கு சிறந்த முன்மாதிரி. நம்மீது அன்பு வைத்து, அன்பினாலே நமக்காக உயிரையே கொடுத்தவர். உங்களுக்கு சிறந்த நண்பர்களைத் தந்து, சிறந்த நண்பர்களாய் வாழ உதவி செய்வாராக!.

ஜெப உதவிக்கு
1800 309 9333
+91 944 28 00 447
+91 944 28 00 449
மின்னஞ்சல்
prayers@jesuslives.in
இணையதளம்
JESUSLIVES.IN

# GOOD BOY, GIRL

சிறுவர் பகுதி

### ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா?

உற்சாகமாக பள்ளிக்கு சென்ற முகில் முகவாடலாய் வீட்டிற்கு வந்தான். வந்தவன் யூனிபார்மும் மாற்றாமல், **SNACKS**–ம் சாப்பிடாமல் போய் படுத்துக்கொண்டான். தம்பி, என்னடா என்ன முடியலையா என்று அம்மா அவனைக் கேட்டது தான் தாமதம், ஓ–ன்னு அழத்தொடங்கிட்டான். தம்பி என்னன்னு சொல்லுமா, யாரும் பசங்க அடிச்சாங்களாமா? இல்லைன்னு தலையாட்டினான். கீழே ஏதும் விழுந்திட்டியா? இல்லைன்னு மீண்டும் தலையாட்டினான், அப்ப ஏன்டா அழுகிற, பாப்பா வேற எதுக்கு அழுகுது சொல்லுடா என்றார்கள் அம்மா. அது மிஸ் வந்து என்ன மக்குன்னு திட்டிட்டாங்க, நான் ஒழுங்கா சரியா? **HOME WORK** செய்யலைன்னு திட்றாங்க, நான் இனிமே ஸ்கூலுக்கு போக மாட்டேன்–ன்னு அழுதான் முகில். நீ நல்ல படிக்கனும்னு தான் மிஸ் சத்தம் போட்டிருப்பாங்க. சரி அழுகாதே இங்கே வா, நான் உனக்கு ஒரு வசனம் சொல்லித்தர்றேன். அந்த வசனத்தை மனப்பாடமா நல்ல படிச்சு, ஜெபம் பண்ணிட்டு **HOME WORK** செய். அப்புறம் பாரு அந்த மிஸ் உன்னை **GOOD BOY**–ன்னு சொல்லுவாங்க. ஆ......ய் அப்படியா நிஜமாவா? ஆமாமப்பா என்ற அம்மா, அந்த வசனத்தை தினமும் சொல்லிக் கொடுத்தாங்க அதை அப்படியே சொல்லி ஜெபம் பண்ணினான். **HOME WORK**–ஐயும் நல்லா பண்ணிட்டுப் போனான். முகிலின் **HOME WORK** நோட்டை மிஸ் **CORRECTION** பண்ணி முடித்தபின் **GOOD** என்று எழுதியிருந்தார். அதுமட்டுமல்ல அவனைப் பார்த்து **GOOD BOY** என்றும் பாராட்டினார்கள். உடனே அவன் இயேசப்பாவுக்கு நன்றி என்றான். மிஸ் என்னது என்ன சொல்ற என்றார்கள். அதற்கு முகில் மிஸ் நீங்க ஒருநாள் என்ன மக்குன்னு திட்டிட்டீங்க, அன்னைக்கு நான் அழுதிட்டேயிருந்தேன்னா அப்ப எங்க அம்மா ஒரு வசனம் சொல்லித்தந்தாங்க. அந்த வசனத்தை தினமும் சொல்லி சொல்லி ஜெபம் பண்ணு உங்க மிஸ் உன்னை **GOOD BOY**–ன்னு சொல்லுவாங்கன்னு சொன்னாங்க. அதே மாதிரி நீங்களும் **GOOD BOY**–ன்னு சொன்னவுடனே, அதான் நான் இயேசப்பா நன்றின்னு சொன்னேன். எங்க அந்த வசனத்தை நம்ம **CLASS** பிள்ளைகளுககும் சொல்லு பார்ப்போம். **OK** மிஸ்.

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா, எனக்கும் ஸ்கூலுக்கு போகப பிடிக்கலை. படிப்பு வரவே மாட்டேங்குது எத்தனை முறை சொல்லித்தந்தாலும், புரியவே மாட்டேங்குது. எனக்கு ஞானம் தாங்க. என்னையும் **GOOD BOY, GOOD GIRL**—ன்னு சொல்லும்படி நன்கு படித்து எல்லாத் தேர்வுகளிலும் வெற்றி பெற உதவி செய்யுங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

## மனப்பாட வசனம்

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறையுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன்

யாக் 1:5

# ஜெபத்தைக் கேட்பவரே

சாட்சி பகுதி



### தடைபட்ட திருமணத்தை நிறைவாய் நடத்தினார்

நீண்டநாட்களாக என் அண்ணனின் திருமணம் நடைபெறும் காரியத்தில் தடை இருந்துவந்தது. அண்ணனுக்காக தாய் ஸ்தானத்தில் நீண்டநாட்களாக பாரப்பட்டு ஜெபித்து வந்தேன். தேவன் அற்புதமாய் ஜூலை 1-ஆம் தேதி திருமணம் நடக்க கிருபை செய்தார். கர்த்தருக்கு கோடான கோடி ஸ்தோத்திரம் -கலையரசி, திண்டுக்கல்



### தொலைவில் இருந்தாலும் சுகம் தந்தார்

என் மருமகன் மும்பை சென்றிருந்தார். சென்ற இடத்தில் அதிகமான உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அருகில் இருந்தாலும் தொலைவில் இருந்தாலும் சுகம் தருவார் என்ற விசுவாசத்தோடு வானத்தின் வாசல் எழுப்புதல ஜெப மையத்தில் நடந்த கூடுகையில் கண்ணீரோடு ஜெபித்தேன். தேவன் கிருபையாய் சுகம் தந்தார் -எஸ்தர், திண்டுக்கல்



### புதிய காரியம் எனக்கு பெரிய காரியம் !

என் மனைவிக்கு ஒன்றரை வருடமாக தனியார் துறை ஒன்றில் வேலைக்கு முயற்சித்தும் கிடைக்கவில்லை. எனக்கு ஜெபம் என்பது புதிய காரியம். ஆனால், என் மனைவி சொன்னதை கேட்டு நானும் ஜெபம் செய்தேன். இயேசு கிறிஸ்து என் ஜெபத்தைக் கேட்டு என் மனைவிக்கு அந்த வேலையை தந்தார்
நாகரத்தின பாண்டி, திண்டுக்கல்



### பொருத்தனையில் தேவா மகிமை!

காலில் உள்ள தழும்பினால் என் தங்கையின் திருமணம் நடக்கும் காரியத்தில் நீண்டநாட்களாக தடை இருந்து வந்தது. வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையத்தில் குடும்பமாக வந்து ஜெபித்துப் பொருத்தனை செய்திருந்தோம். தேவன், பொருத்தனையில் மகிமையாய் திருமணத்தை நடத்தித்தந்தார்.
ஆண்ட்ரோ சோஃபியா, திண்டுக்கல்



Jesus Lives MINISTRIES

ஆகஸ்ட் 13 10am-2pm

மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமை

செம்பட்டியில்

# உபவாச ஜெபம்

நேரடி கூடுகை
PHYSICAL GATHERING

**இடம்:**
வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையம்
செம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்



**தேவ செய்தியாளர்கள்**
சகோ. L.வின்சென்டராஜ்
சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்.

SUBSCRIBE AND WATCH ON JESUS LIVES MINISTRIES

## வாசகர்கள் கவனத்திற்கு !

அன்பான வாசகர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் மூலம் You Tube சேனலில் ஒளிபரப்பாகும், கர்த்தாவே என்னை கைதூக்கி விடும், இயேசுவை தினம் பார்ப்போம், சுவிசேஷ ஒளி என்ற நிகழ்ச்சிகள் மூலமாகவும், இயேசுவை தினம் பார்ப்போம் பத்திரிக்கை மூலமாகவும், வானத்தின் வாசல் உபவாச ஜெபங்கள் மூலமாகவும் நீங்கள் பெற்ற நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் எங்களுக்கு எழுதி அனுப்ப மறவாதிருங்கள்

944 28 00 449 944 28 00 447

# நடப்பு செய்திகள்

## உலகை அச்சுறுத்தும் மார்பர்க் வைரஸ்.. கானா நாட்டில் கண்டுபிடிப்பு

வௌவால்களிடமிருந்து புது வைரஸான மார்பர்க், வேகமாக பரவி வருவதால், ஆப்பிரிக்கா நாட்டு சுகாதாரத்துறை முக்கிய வேண்டுகோள் ஒன்றை அந்நாட்டு மக்களுக்கு பிறப்பித்துள்ளது. சென்னையில் ப்ரீமியம் 2 & 3 பிஹெச்கே கார்னர் வீடுகள் 94 லட்சம் முதல் கொரோனா வைரஸிடமிருந்தே இன்னும் உலக நாடுகள் மீள முடியாமல் சிக்கி கொண்டிருக்கும் போது, அடுத்தடுத்த புது வைரஸ்கள் மனித குலத்தை அச்சுறுத்தி வருகின்றன. அந்த வகையில், கடந்த சில மாதங்களாக குரங்கு அம்மை வைரஸ் பரவி கலக்கத்தை தந்தது. இப்போது மார்பர்க் வைரஸ் **(Marburg Virus)** என்ற புது வைரஸ் கிளம்பி உள்ளது. ஆப்பிரிக்க நாடான கானாவில் இரண்டு நபர்களுக்கு இந்த வைரஸ் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஒருவருக்கு 26 வயது, இன்னொருவருக்கு வயது 51. இதனால், இவர்களுடன் தொடர்பில் இருந்து 90-க்கும் மேற்பட்டவர்கள் உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டு விட்டனர், ஆனால், அவர்களுக்கு தொற்று பாதிப்பு இல்லை என்று கூறப்படுகின்றன. இந்த மார்பர்க் வைரஸ் என்பது எபோலா வைரஸின் குடும்பத்தை சேர்ந்தது என்கிறார்கள். புதைந்த கண்கள் எபோலா பாதித்தால் காய்ச்சல், வாந்தி, ரத்தப்போக்கு, வயிற்றோட்டம் வருவது போலவே, இந்த புது வைரஸுக்கும் அதேபோல அறிகுறிகள் ஏற்படுகின்றன. ஆனால், மூக்கு மற்றும் பிறப்புறுப்புகளில் ரத்தம் வருதல் ஆகியவை இந்த வைரஸின் தீவிர அறிகுறிகளாகும். மேலும் நோயாளிகளின் தோற்றம் கண்கள் ஆழமாக புதைந்தது போல் இருப்பது, வெளிப்பாடற்ற முகங்கள் மற்றும் தீவிர சோம்பல் போன்றவையும் சொல்லப்படுகிறது. எனவே இதுவும் உயிரிழப்பை ஏற்படுத்தும் வைரஸ்தான். **RT-PCR** டெஸ்ட் செய்து கொள்வதன் மூலம் இந்த நோயை கண்டறியலாம் என்கிறார்கள். ஆனால், இந்த மார்பர்க் வைரஸுக்கு தடுப்பூசி கிடையாது. இந்த மார்பர்க் வைரஸிலிருந்து மீண்டவர்கள் மூலமும் மார்பார்க் வைரஸ் பரவும் என்பதால் சுமார் ஒரு வருடத்திற்கு மார்பர்க் வைரஸ் பாதித்தவர்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கிறார்கள். மார்பர்க் வைரஸ் பழந்தின்னி வௌவால்களிடமிருந்து விலங்குகளுக்கும், பின்னர் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கும் பரவுகிறது. மார்பர்க் தாக்கப்பட்டு ஒருவர் இறந்துவிட்டால் இறந்த அவர் உடல் மூலமும் இவை பரவும். இது குறித்து உலக சுகாதார நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில், 'கானாவில் நடத்தப்பட்ட பரிசோதனையில் 2 பேருக்கு மார்க்பர்க் வைரஸ் இருப்பது உறுதியாகியுள்ளது. அவர்களுக்கு வயிற்றுப்போக்கு, காய்ச்சல், குமட்டல் மற்றும் வாந்தி போன்ற அறிகுறிகள் இருந்தது. இந்த வைரஸ் தொற்று உறுதியானால், மேற்கு ஆப்பிரிக்காவில் மார்க்பர்க் வைரசால் பாதிக்கப்பட்ட 2வது பாதிப்பு பொதுவாக இருக்கும். 1967 முதல் இதுவரை 12 முறை கிழக்கு மற்றும் தென் ஆப்பிரிக்காவில் இந்த வைரஸ் பரவியுள்ளது.. இதன் இறப்பு விகிதம் 24 சதவீதத்தில் இருந்து 88 சதவீதமாக வைரஸின் தீவிர தன்மையைப் பொறுத்து மாறியுள்ளது. இந்நிலையில், கானா மக்களுக்கு அந்நாட்டு சுகாதாரத் துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர். அதில், மார்பர்க் வைரஸ் தொற்றுக்குள்ளான வௌவால் போன்ற விலங்குகள் மூலம், மனிதர்களுக்கும் இதன் தொற்று ஏற்படும் என்று கண்டறியப்பட்டுள்ளது. தொற்றுக்குள்ளான மனிதரிடமிருந்து இன்னொருத்தருக்கு இந்த வைரஸ் பரவும் தன்மை கொண்டது. வௌவால்கள் வசிக்கும் குகைகள் போன்ற பகுதிகள் அருகில் செல்ல வேண்டாம், அசைவ உணவுகளை நன்கு சமைத்து உண்ண வேண்டும்' என்று கானா நாட்டு அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai



# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | |
|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST |
| BRANCH | : KOCHADAI MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA |
| A/C.NO | : 493902010001022 |
| IFSC CODE | : UBIN0549398 |

| | |
|---|---|
| A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : MADURAI |
| BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**
WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

**3) காசோலை(CHEQUE)**
JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O)** : இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

भारतीय डाक
India Post

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2021-2023
WPP Registration No. TN/WPP-40/SR/2021-2023
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S




TO

If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.